மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணைப் பரீட்சை- 2019
முயற்சியாண்மைக் கல்வி

தரம் 11 பகுதி 1,11 நேரம்:- 3 மணித்தியாலங்கள்

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள் | 63 T 1,11 | சுட்டெண்:-…………………...

கவனிக்குக:-
1) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
2) இலக்கம் 01 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிக

## பகுதி 1

01. பின்வருவனவற்றுள் முயற்சியாண்மை தொடர்பான சரியான கூற்றாக அமைவது,
(1) எண்ணமொன்றை செயற்பாடாக மாற்றுவதற்கு பல நபர்களிடம் காணப்படும் திறன்
(2) தனிநபர்கள் வயது முதிந்தோராகும் போது உருவாகின்ற திறனாகும்.
(3) இயல்பாகவே உரிமையாக்கிக் கொள்ளக் கூடிய திறனாகும்.
(4) எதிர்காலத்தை மாற்றுவதற்காக தூண்டப்படுகின்ற பலரின் மனநிலையாகும்.

02. ஆடைத் தொழிற்சாலையொன்றில் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் தையல் இயந்திரங்கள், கட்டடம், கருவிகள் என்பவற்றைக் குறிப்பது,
(1) நிலம் (2) உழைப்பு
(3) மூலதனம் (3) முயற்சி

03. முயற்சியாளரிடம் காணப்படும் புதிய பொருட்கள், அல்லது சேவைகளை உருவாக்கக் கூடிய திறனைக் குறிப்பது,
(1) புத்துருவாக்கத்திறன்
(2) நட்ட இடர்களை பொறுப்பேற்கும் திறன்
(3) ஆக்கத்திறன்
(4) தொடர்பாடல் திறன்

04. புத்துருவாக்கம் இடம்பெறுகின்ற முறைகளில் கூட்டு என்பதற்கு உதாரணமாக அமைவது,
(1) இலத்திரனியல் வியாபாரம்
(2) குரக்கன் மாவை பயன்படுத்திய வெதுப்பக உற்பத்திகள்
(3) கொழுப்பற்ற பால்
(4) ஸ்மார்ட் கைத்தொலைபேசி

05. வணிகருக்கும், முயற்சியாளருக்கும் இடையிலான ஒற்றுமையாகக் கருதப்படக் கூடியது,
(1) சூழல் மாற்றங்களை கவனத்தில் கொண்டு ஆக்க ரீதியான புத்தாக்கங்களை முன்வைத்தல்
(2) போட்டியினை விருப்பத்துடன் தேடிச் செல்லல்
(3) பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபடல்
(4) பிரச்சினைகளை ஆக்கரீதியிலான முறையில் தீர்த்தல்

06. முயற்சியாண்மை மூலம் முயற்சியாளருக்கு கிடைக்கும் **நன்மையல்லாதது,**
(1) பயன்படுத்தாத ஆற்றல்களை பயன்படுத்த முடிதல்
(2) சுதந்திரமும், மிக உயர்ந்த ஆத்ம திருப்தியும் உருவாகுதல்
(3) தலைமைத்துவம் கிடைக்கின்றமை
(4) தன்னாதிக்கமுள்ள சுதந்திரமான பொருளாதாரச் சமூகம் உருவாகுதல்

07. முயற்சியாளர் ஒருவர் தனது ஆக்கபூர்வமான சிந்தனைகளை விழிப்புறச் செய்து, புதிய உற்பத்திகளை பரீட்சித்துப் பார்ப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் வணிகமாக அமைவது,
(1) பேரளவு வணிகம் (2) சிற்றளவு வணிகம்
(3) கூட்டுறவு வணிகம் (4) நடுத்தரளவு வணிகம்

08. கீழே முயற்சியாளர் கருமங்கள் சில தரப்படுகின்றது. இவற்றுள் உரிமையாளர் வகிபங்குக்குரிய கருமமாக இனங்காணக் கூடியது,
(1) ரூ 50 000 தொகையினை வணிகத்திலிடல்
(2) ஊழியருக்கு முன்மாதிரியாகச் செயற்படல்
(3) தாமதமாக வரும் ஊழியர்களை எச்சரிக்கை செய்தல்
(4) தமக்குரிய விடுமுறைகளை (Leave) எடுக்காது வேலை செய்தவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குதல்

09. சிற்றளவு வணிகம் என்பது,
(1) குறைந்த ஊழியர்களையும், நவீன தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துவது
(2) குறைந்த ஊழியர்களையும், அதிக மூலதனத்தையும் கொண்டது
(3) சுதந்திரமாக வழிநடத்தப்படாததும், அதிக மூலதனத்தையும் கொண்டது
(4) வணிகத்தை நடாத்திச் செல்லும்போது சுற்றாடல் மாற்றங்களுக்கு இலகுவாக ஈடு கொடுக்கக்கூடியது.

10. தும்புத் தொழிற்சாலை ஒன்றினை நடாத்தும் சுதன் என்பவருக்கு அவரது தொழிற்சாலையிலுள்ள இயந்திரங்களை இயக்குதல், பழுதுபார்த்தல், புதுப்பித்தல் தொடர்பான ஆற்றலைக் கொண்டிருந்தார். இவருக்குக் காணப்படும் திறனைக் குறிப்பது,
(1) தொழில்நுட்பத்திறன் (2) எண்ணக்கரு ரீதியான திறன்கள்
(3) மானிடத்திறன் (4) தொடர்பாடல் திறன்

11. அகச்சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கும் விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) வழங்குநர், போட்டியாளர் (2) வழங்குநர், முகாமையாளர்
(3) உரிமையாளர், ஊழியர் (4) வாடிக்கையாளர், உரிமையாளர்

12. கீழே தரப்படும் கூற்றுக்களில் வணிகமொன்றின் பலவீனமாக கருதப்படக் கூடியது,
(1) புதிய தொழில்நுட்ப உபகரணங்களின் விலையேற்றம்
(2) உள்நாட்டினுள் யுத்த நிலைமை காணப்படல்
(3) கடனுக்கான வட்டிவீதம் அதிகரிப்பு
(4) வளங்கள் சிக்கனமாக பயன்படுத்தப்படாமை

13. முயற்சியாண்மையின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றிய விரிவுரையாளர் ஒருவர் " முயற்சியாண்மையின் மூலம் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிப்பதனூடாக வருமானம் அதிகரித்து சந்தை வாய்ப்புக்கள் விரிவடைகின்றது" எனக் கூறுகின்றார். மேற்கூறிய கூற்றினூடாக வெளிப்படுத்தப்படும் சூழல் காரணியாக அமைவது,
(1) அரசியல் மற்றும் சட்டச் சூழல் (2) பொருளாதாரச் சூழல்
(3) விஞ்ஞான தொழில்நுட்பச்சூழல் (4) இயற்கைச் சூழல்

14. இலங்கைப் பொருளாதாரத்தில் இரண்டாம் நிலை வணிகத்துறையினை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) விவசாயம், அகழ்வும் சுரங்கத்தொழிலும்
(2) உற்பத்தி, வியாபாரம்
(3) வியாபாரமும், துணைநிலைச் சேவைகளும்
(4) உற்பத்தி, நிர்மாணம்

15. இலங்கையில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகள், மரவேலைப்பாடுகள், ஓவியங்கள் என்பன எவ்வாறான வளங்களாகக் காணப்படுகின்றன.
(1) இயற்கை வளம் (2) கலாசார வளம்
(3) கனிய வளம் (3) விலங்கு வளம்

16. சந்தையிலுள்ள நுகர்வோரில் ஒரு குறிப்பிட்ட குழுவினர் தமது தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை எவ்வாறு அழைக்கப்படும்?
(1) சந்தை இடம் (2) சந்தை இடைவெளி
(3) சந்தைக் கேள்வி (4) சந்தை நிரம்பல்

17. தொலைக்காட்சி சேவையொன்றை நடாத்தும் நிறுவனமொன்று தனது கல்விச்சேவையின் மூலம் தரம் 11 மாணவர்களுக்கு வணிகத்திட்டத்தின் முக்கியத்துவம் பற்றிய நிகழ்ச்சி ஒன்றினை ஒளிபரப்பு செய்யுமானால் குறித்த நிகழ்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்கு நுகர்வோராகக் கருதப்படுபவர்,
   (1) தரம் 11 இல் கற்கும் மாணவர்கள்
   (2) கல்விச் சேவை நிகழ்ச்சிகளை பார்க்கும் மாணவர்கள்
   (3) குறித்த தொலைக்காட்சி நிறுவனத்தின் அனைத்து நிகழ்ச்சிகளையும் பார்ப்பவர்கள்
   (4) தரம் 11 இல் முயற்சியாண்மை கற்கும் மாணவர்கள்

18. பெண்களுக்கான பழைய ஆடை வடிவமைப்புக்கள் தற்போது நவீன முறையில் முன்வைக்கப்படுகின்றன. SAMPER மாதிரியில் எந்த வழிமுறையைப் பின்பற்றி புதிய உற்பத்தி முன்வைக்கப்படுகின்றது?
   (1) Re arrange – மீள உருவாக்குதல்
   (2) Eliminate – வேறாக்குதல்
   (3) Minimize – சிறிதாக்குதல்
   (4) Combine – தொடர்புபடுத்தல்

19. சிறந்த வணிக எண்ணமொன்றின் பண்பாக **அமையாதது,**
   (1) வணிகத்தின் நிருவாக நடவடிக்கைகளை சிறப்பாகப் பேணல்
   (2) வணிகமொன்றாக அபிவிருத்தி செய்யக் கூடிய திறன் இருத்தல்
   (3) சூழலில் எழும் தேவைகளை நிறைவு செய்தல்
   (4) போட்டித்தன்மைக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கக் கூடியதாகவிருத்தல்

20. SWOT பகுப்பாய்வினை மேற்கொள்ளும்போது குறிப்பிட்ட ஒரு வணிகத்தில் திறமையான ஊழியர்கள் காணப்படல், தரமான உற்பத்திகள், ஸ்திரமான நிதி நிலைமை காணப்படின் அதனைக் குறித்து நிற்பது நிறுவனத்தின்,
   (1) பலத்தையாகும் (2) அச்சுறுத்தலையாகும்
   (3) பலவீனத்தையாகும் (3) வாய்ப்பையாகும்

21. வணிகத்திட்டம் தயாரிக்கும்போது வணிகத்தை பற்றிய படம் ஒன்றை மனதில் நிர்மானித்துக் கொள்ளும் முகமாக முன்வைக்கப்படுவது,
   (1) நிர்வாகத்திட்டம் (2) நிதித்திட்டம்
   (3) நிறைவேற்றுச் சுருக்கம் (3) சந்தைப்படுத்தல் திட்டம்

22. சந்தைக்கு முன்வைக்கும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கு கேள்வியை ஏற்படுத்திக் கொள்வதற்கும், நடைமுறையில் உள்ள கேள்வியை மேலும் அதிகரித்துக் கொள்வதற்கும், இலக்கு வாடிக்கையாளர்களைக் கவர்வதற்குமாக பின்பற்றப்படும் சந்தைப்படுத்தல் உபாய முறையாகக் கருதப்படுவது,
   (1) உற்பத்தி (2) மேம்படுத்தல் (3) விலை (4) இடம்

23. Sumsung கையடக்கத்தொலைபேசிக்கு பதிலீட்டு உற்பத்திப் பொருளாக விளங்குவது,
   (1) Huawei (குவாவி) (2) Lava (லாவா)
   (3) Vivo ( விவோ) (4) Tab (டெப்)

24. முயற்சியாளர் ஒருவர் உற்பத்தித்திட்டத்தை தயாரிப்பதன் நோக்கம்,
   (1) இலக்கு வாடிக்கையாளரைத் தெரிதல், அதனை நெருங்கும் முறைகளைக் கண்டறிதல்
   (2) அலகுக் கிரயத்தைக் கணிப்பிடல்
   (3) நிதி பெறும் வழிகள், பிரயோகிக்கும் வழிமுறைகள் பற்றி அறிதல்
   (4) வணிகங்களுக்கு தேவைப்படும் / எதிர்பார்க்கப்படும் மானிட வளத்தை அறிதல்

25. வெதுப்பக உற்பத்திகளுக்கு உள்ளீடாக கருதப்பட முடியாதது,
   (1) பாண் (2) கோதுமை மா (3) ஈஸ்ட் (4) உப்பு

26. பின்வருவனவற்றுள் கணக்காளர் பதவிக்குரிய தகைமையாகக் கருதப்படக் கூடியது,
   (1) காசோலையில் கையொப்பமிடல்
   (2) குறித்த திகதியில் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்
   (3) நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல்
   (4) பட்டயக் கணக்காளராக இருத்தல்

27. கீழே தரப்படும் செலவுகளில் நிர்வாகச் செலவுகளை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியினை தெரிவு செய்க.
   (1) விளம்பரம், மேம்படுத்தல் செலவுகள்
   (2) மூலப்பொருள் செலவு, கூலிச் செலவு
   (3) காப்புறுதி, தொலைபேசிக்கட்டணம
   (4) சந்தைப்படுத்தல் ஊழியர் சம்பளம், விநியோக வாகனத் தேய்வு

28. வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு முன் தாங்கிக்கொள்ள வேண்டிய செலவொன்றாக அமைவது,
   (1) நடைமுறையல்லாச் சொத்துக்கள் ( நிலையான சொத்துக்கள்) கொள்வனவு செய்யப்படல்
   (2) வணிகத்தை பதிவு செய்வதற்கான செலவுகள்
   (3) செயற்படு முலதனம்
   (4) அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான செலவுகள்

29. பின்வருவனவற்றுள் காசு உட்பாய்ச்சலாகக் கருதப்படக் கூடியது,
   (1) சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படல்
   (2) கடன் தவணைப்பணம், வட்டி செலுத்தப்படல்
   (3) கடனாகப் பெறும் தொகை
   (4) குத்தகைக் கட்டணம் செலுத்தப்படல்

30. பின்வருவனவற்றுள் உற்பத்தியல்லாக் கிரயமாகக் கருதப்படுவது,
   (1) மூலப்பொருள் கிரயம்
   (2) உற்பத்தி மேந்தலைக் கிரயம்
   (3) கூலிக் கிரயம்
   (4) நிதிச்செலவுகள்

31. வணிக அமைப்புக்களை உரிமையடிப்படையில் வகைப்படுத்தும் போது பொதுத்துறை வணிக அமைப்பாகக் கருதப்படுவது,
   (1) தனியுடைமை வணிகம்
   (2) பங்குடைமை வணிகம்
   (3) திணைக்களங்கள்
   (4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

32. தனியுடைமை வணிகத்தின் பெயர்ப்பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுவது,
   (1) பிரதேச செயலாளரால்
   (2) கிராம அலுவலரால்
   (3) மாகாணச் செயலாளரால்
   (4) கம்பனி பதிவாளரால்

33. பல்வேறு ஆற்றலுள்ள நபர்களை வணிகத்துடன் இணைத்து ஆரம்பிக்கக் கூடிய வணிக அமைப்பாகக் கருதப்படக் கூடியது,
   (1) தனியுடைமை வணிகம்
   (2) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி
   (3) பங்குடைமை வணிகம்
   (4) கூட்டுறவு வணிகம்

34. தனியுடைமை, பங்குடைமை வணிகங்களோடு ஒப்பிடும்போது கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் சிறந்த பண்பாக அமைவது,
   (1) நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டது
   (2) சட்ட ஆளுமையற்ற அமைப்பாகக் காணப்படல்
   (3) நட்டப்பொறுப்பு பரவலாக்கப்பட்டிருத்தல்
   (4) பல்வேறு ஆற்றலுள்ள நபர்களை ஒன்று சேர்க்க முடிதல்

35. பின்வரும் பொறுப்புக்களில் வணிகமொன்றின் சட்டப்பொறுப்பாக அமைவது,
   (1) மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை செயற்றிறனாக பயன்படுத்தல்
   (2) தடைசெய்யப்பட்ட மூலப்பொருட்களை பயன்படுத்தாதிருத்தல்
   (3) பெண்கள், சிறுபான்மையினருக்கு தொழில் வாய்ப்பில் சமவாய்ப்பு வழங்கல்
   (4) இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல்

❖ **பின்வரும் சம்பவத்தை வாசித்து 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

சிறந்த வடிவமைப்புத்திறன் கொண்ட கமலி என்பவர் தமது பிரதேசத்தில் தாராளமாகக் கிடைக்கக் கூடிய வாழை நாரிழைகளைக் கொண்டு பெண்களுக்கான கைப்பைகளை தயாரிக்கும் உற்பத்தித் தொழிற்சாலையொன்றை அப்பிரதேசத்தில் காணப்படும் வேலைவாய்ப்பற்ற மூன்று பெண்களை வேலைக்கமர்த்தி நடாத்தி வருகின்றார். அத்துடன் இவர் தனது உற்பத்திப் பொருட்களை அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ‘என்ரபிரைஸ் ஶ்ரீலங்கா’ வர்த்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தியிருந்தார்.

36. மேற்படி வணிகத்திற்கு வாய்ப்பாகக் கருதப்பட **முடியாதது,**
   (1) தாராளமாகக் கிடைக்கக் கூடிய வாழை நாரிழைகள்
   (2) சமூகத்தில் வேலைவாய்ப்பற்ற பெண்கள் காணப்படல்
   (3) அரசு மற்றும் வேறு நிறுவனங்களின் ஊக்குவிப்புக் காணப்படல்
   (4) கமலியின் வடிவமைப்புத்திறன்

37. மேற்படி வணிகத்தினால் கமலிக்கு கிடைக்கக்கூடிய நன்மையாகக் கருதப்படக் கூடியது,
   (1) கவர்ச்சிகரமான இலாபத்தை உழைத்தல்
   (2) வேலையின்மைக்கு தீர்வாகவிருத்தல்
   (3) பயன்படுத்தப்படாத பிரதேச வளங்களை பயன்படுத்தல்
   (4) வருமானப் பகிர்வு ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்

38. மேற்படி வணிகத்திலிருந்து அதன் பிரதான வாடிக்கையாளர்களான பெண்கள் எதிர்பார்ப்பது,
   (1) ஈடுபடுத்திய மூலதனத்திற்கு போதுமான இலாபம்
   (2) தொழில்பாதுகாப்பு
   (3) நியாயமான விலையில், தரமான பொருட்கள்
   (4) சட்டவிதிகளுக்கமைவாக இருத்தல்

39. கமலி ‘என்ரபிரைஸ் ஶ்ரீலங்கா’ கண்காட்சியில் பங்குபற்றியதன் மூலம் எவ்வாறான நிதிசாரா ஊக்குவிப்புக்களை அரசிடமிருந்து பெற்றுக்கொள்கின்றார்?
   (1) சந்தைவாய்ப்புக்களை தேடிக்கொடுத்தல்
   (2) ஆலோசனைச்சேவை
   (3) தொழில்நுட்பச்சேவை
   (4) சட்டச்சேவைகள்

40. கமலி தனது உற்பத்திப்பொருள் மற்றும் அவற்றினை உற்பத்தி செய்யும் முறைகளை மேலும் அபிவிருத்தி செய்ய எண்ணுகின்றார். கீழ் குறிப்பிடப்படும் நிறுவனங்களில் எந்நிறுவனத்திடமிருந்து கமலி தனக்கு தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்?
   (1) கைத்தொழில் அதிகாரசபை
   (2) கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
   (3) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபை
   (4) இலங்கை தரக்கட்டளை பணியகம்

(40×1=40 புள்ளிகள்)

**மாகாணக்கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**மூன்றாம் தவணைப் பரீட்சை- 2019**
**முயற்சியாண்மைக் கல்வி**
**தரம் 11** **பகுதி 11**

**கவனிக்குக:-**
❖ **முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றுள் நான்கு வினாக்களுமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

**வினா இல 01**

❖ பின்வரும் சம்பவத்தை கவனமாக வாசித்து (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

குமணன் என்பவர் எச்செயலிலும் வெற்றியானது எமது சுயமான திறனில் தங்கியுள்ளது என்ற நம்பிக்கையும், சுதந்திரமாக செயற்படுவதில் ஆர்வமும் உள்ள துடிப்பான இளைஞராவார். சந்தை ஆய்வு ஒன்றினை செய்ததன் மூலம் அவர் வசிக்கும் பிரதேசத்தில் யோகட் உற்பத்திப் பொருளுக்கு அதிக கேள்வி காணப்பட்டதை அறிந்து கொண்டார். அதற்கமைய தனது நண்பனின் உதவியுடன் வணிகத்திட்டம் ஒன்றினை தயாரித்துக் கொண்டதுடன் சந்தையைக் கைப்பற்றுவதற்கு தனித்து பால் யோகட் மட்டுமன்றி, பழக்கலவை யோகட், தொற்றா நோய்கள் கொண்ட நுகர்வோருக்கு விசேட வகையான யோகட் என்பவற்றை உற்பத்தி செய்யத் தீர்மானித்திருந்தார். மேலும் தனது உற்பத்திப் பொருட்களுக்கான விலையினை சந்தையை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிப்பதுடன், உற்பத்திப் பொருட்களை சில்லறை வியாபார நிலையங்களினூடாக விநியோகிக்கத் திட்டமிட்டார். தனது உற்பத்திப்பொருட்கள் பற்றி நுகர்வோருக்கு தெரியப்படுத்த வியாபார நிலையங்கள் முன்பாக பதாகைகளை காட்சிப்படுத்தவும், சிறுவர்களுக்கு அவர்களின் கல்வி சார்ந்த விடயங்களை ஸ்டிக்கர்களாக வழங்கவும் தீர்மானித்தார்.

1. குமணனிடம் காணப்படும் முயற்சியாண்மைப் பண்புகள் இரண்டு தருக.
2. குமணன் தனது சந்தையை ஆய்வு செய்யும்போது எவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும்?
3. குமணன் ஆரம்பத்திலேயே வணிகத்திட்டம் ஒன்றினைத் தயாரிப்பதற்கான தேவைப்பாடுகள் நான்கு தருக.
4. குமணன் உற்பத்தித்திட்டத்தை தயாரிக்கும்போது அதில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் நான்கு தருக.
5. குமணனால் பின்பற்ற எண்ணியிருக்கும் பின்வரும் சந்தைப்படுத்தல் உபாய வழிமுறைக்கான உதாரணங்களை குறித்த விடய ஆய்விலிருந்து தருக.
   (அ) உற்பத்திப்பொருள் (இ) விலை
   (ஆ) இடம் (ஈ) மேம்படுத்தல்

➢ குமணனின் வணிகத்திட்டத்தன் முதல் ஒரு வருடத்திற்கான மதிப்பிடப்பட்ட தகவல்கள் வருமாறு:-

| | |
|---|---|
| விற்பனை வருமானம் | ரூ 2000000 |
| மூலப்பொருட்கிரயம் | ரூ 750000 |
| கூலிக்கிரயம் | ரூ 250000 |
| ஏனைய உற்பத்திக்கிரயம் | ரூ 200000 |
| பதாகை அச்சிடல் செலவு | ரூ 20000 |
| ஸ்டிக்கர் செலவு | ரூ 10000 |
| விநியோக ஊழியர் சம்பளம் | ரூ 50000 |
| நிர்வாகச்செலவு | ரூ 72000 |
| நிதிச்செலவுகள் | ரூ 24000 |

❖ உத்தேச உற்பத்தி அலகுகள் 50 000 யோகட்டுக்கள்

6. குமணன் வணிகத்தின் முதல் ஒரு வருடத்தற்கான மொத்த உற்பத்திக் கிரயத்தினைக் கணிப்பிடுக.
7. மொத்த உற்பத்தியல்லாக் கிரயத்தினைக் கணிப்பிடுக.
8. முதல் ஒரு வருடத்திற்கான உத்தேச பெறுபேறு எவ்வளவு?
9. ஒரு அலகு யோகட்டுக்கான உற்பத்திக் கிரயத்தினைக் கணிப்பிடுக.
10. சந்தைப்படுத்தல் செலவுகளின் மொத்தத்தொகை யாது?

(2×10 = 20 புள்ளிகள்)

**வினா இல 02**

அறிவழகன் சிறுகுழந்தைகளின் பிறந்தநாள் விழாவிற்கான மேடை அலங்கரிப்புக்களை வண்ணவிளக்குகள், கடதாசி மட்டைகளைக் கொண்டு வித்தியாசமான முறையில் வடிவமைத்துக் கொடுக்கும் முயற்சியொன்றினை பொழுதுபோக்காக தான் வசிக்கும் பிரதேசத்தில் மேற்கொண்டு வருகின்றார்.

1. அறிவழகன் தனது ஆக்கத்திறனை விருத்திசெய்யவேண்டுமெனின் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்?
2. அறிவழகன் பொழுதுபோக்காக செய்யும்முயற்சியினை ஒரு வணிகமாக மாற்ற எண்ணினாரெனில் அவர் எவ்வாறான திறன்களை தனக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.
3. அறிவழகன் தனக்குத் தேவையான மூலதனத்தை எவ்வாறான வழிகளிலிருந்து பெற்றுகொள்ள முடியும்?
4. மேற்படி முயற்சியினை சிறந்த வணிக வாய்ப்பாக இனங்காண வேண்டுமெனில் அவை கொண்டிருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தருக.
5. அறிவழகனுக்கு வணிக எண்ணம் தோற்றம் பெற்றதற்கான மூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(2×5 = 10 புள்ளிகள்)

**வினா இல 03**

1. கண்ணகி சிறியளவில் சத்துணவு மா தயாரிக்கும் தொழிற்சாலையொன்றினை நடாத்தி வந்தார். தொடர்ந்து நட்டத்தில் இயங்கியமையினால் அதனை முழுமையாக மூடிவிடுதல் என்னும் நிலைக்கு வந்திருந்தார்.
   (அ) மேற்படி சிற்றளவு வணிகத்தினை நடாத்தும் போது இனங்காணக் கூடிய வரையறைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ஆ) கண்ணகி தனது வணிகத்தை வெற்றி பெறச் செய்வதற்கான நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
2. அண்மிய சூழல் காரணிகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)
3. அண்மைக் காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட அபிவிருத்தி விடயங்களிலிருந்து உருவாக்கிக்கொள்ளக் கூடிய வணிக வாய்ப்புக்களுக்கு இரண்டு உதாரணம் தருக. (02 புள்ளிகள்)
4. வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான இடத்தை தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

(2×5 = 10 புள்ளிகள்)

**வினா இல 04**

1. வணிகமொன்றை ஆரம்பிக்க முன்னரான செலவுகள் நான்கினைக் குறிப்பிடுக.
2. நிதித்திட்டமொன்றில் உள்ளடங்கும் விடயங்கள் நான்கு தருக.
3. பங்குடைமை வணிகமொன்றுடன் தொடர்புபடும் சட்டங்கள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் அகவிதிப்பத்திரத்தில் உள்ளடங்கும் விடயங்கள் இரண்டு தருக.
5. அங்கீகார வணிகத்தினூடாக அங்கீகாரம் வழங்குபவர் பெறக்கூடிய நன்மைகள் இரண்டு தருக.

(2×5 = 10 புள்ளிகள்)

**வினா இல 05**

1. எந்தவொரு வணிக அமைப்பிலும் காணப்படக்கூடிய பொதுவான அம்சங்கள் நான்கு தருக.
2. பங்குடைமை வணிகம் என்பதனால் கருதப்படுவது யாது?
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் சட்டத்தின் முன் தனிமனித அந்தஸ்து கொண்டிருப்பதனால் கம்பனியின் பெயரில் மேற்கொள்ளக் கூடிய கருமங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. முயற்சியாளராவதற்கு பெண்களிடம் காணப்படுகின்ற பலங்கள்/ திறமைகள் நான்கினைக் குறிப்பிடுக.
5. இலங்கை தரக்கட்டளை பணியகத்தினால் முயற்சியாளருக்கு வழங்கப்படும் சேவைகள் இரண்டு தருக.

(2×5 = 10 புள்ளிகள்)

**வினா இல 06**

1. முயற்சியாண்மைக் கலாசாரமொன்று உருவாகுவதற்கு சாதகமாகக் காணப்படும் சமூகப் பொருளாதாரக் காரணிகள் நான்கு தருக.
2. பெண்கள் வணிகக் கருமங்களில் ஈடுபட வேண்டியதன் அவசியம் இரண்டு தருக.
3. வணிகமொன்று சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதனால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.
4. வணிக ஒழுக்கங்களை தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் தரப்பினர் மூவரைக் குறிப்பிடுக.
5. வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கு அரச ஊக்குவிப்புக்கள் தேவைப்படுவதற்கான காரணங்கள் இரண்டு தருக.

(2×5 = 10 புள்ளிகள்)

**வினா இல 07**

அமலன் என்பவரால் 2019 ஜனவரி 01 ஆம் திகதி பொருள் உற்பத்தி வணிகமொன்றை நடாத்திச் செல்வதற்கு உத்தேசித்துள்ளார். 2019 ஜனவரி மாதத்தில் வணிகத்தின் வணிகத்திட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு:-

| | |
|---|---|
| வணிகத்திற்கு அமலன் இட்ட காசு | ரூ 250000 |
| தனது நண்பனிடம் பெற்றுக் கொண்ட கடன்தொகை | ரூ 150000 |
| எதிர்பார்க்கப்பட்ட பொருள் உற்பத்தி வருமானம் (கடனுக்கு) | ரூ 250000 |
| எதிர்பார்க்கப்பட்ட பொருள் உற்பத்தி வருமானம் (காசுக்கு) | ரூ 240000 |
| கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு | ரூ 100000 |
| பொருள் கொள்வனவு | ரூ 200000 |
| உபகரணக்கொள்வனவு | ரூ 150000 |
| மின்கட்டணத்திற்கான செலவு | ரூ 10000 |
| ஊழியர் சம்பளக் கொடுப்பனவு | ரூ 45000 |
| மாத இறுதியில் கடனின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு | ரூ 50000 |
| ஏனைய செலவுகளின் கொடுப்பனவிற்கு | ரூ 20000 |

❖ வேண்டப்படுவது:-

1. 2019 ஜனவரி மாதத்தின் உத்தேசிக்கப்பட்ட காசு பாய்ச்சல் கூற்றினை தயாரிக்க? (07 புள்ளிகள்)
2. 2019 ஆம் ஆண்டுக்கான ஜனவரி மாதத்திற்கான இறுதிக் காசு மீதியினைக் கணிப்பிடுக. (01 புள்ளி)
3. பொருள் உற்பத்தி வணிகத்தில் முதலிட்ட பணம் எவ்வளவு? (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)